திரு கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, தீபாவளி நேரத்தில் பட்டாசுகள் விற்பதனால்தான் திவிபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடைப்படுத்தும் உத்தேசம் அரசின் ஆலோசனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதுபற்றி நம்மிடத்திலே எந்தப் புகாரும் வரவில்லை. இது காமராஜ் மார்க்கெட்டில் ஏற்பட்ட தீ விபத்தைப்பற்றிய கேள்வி.

சிதம்பரம் வட்டத்தில் குழாய் கிணறுகளுக்கு மின்இணைப்பு

* 568 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா, திருமுட்டம் பகுதியில் இருக்கும் குழாய்க் கிணறுகள் பூராவும் மின்சாரம் இல்லாமல் ஆயில் இன்ஜின் மூலம் தண்ணீர் இறைத்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இக்கிணறுகளுக்கு மின்சார இணைப்பு தர அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: (அ) சிதம்பரம் வட்டம், திருமுட்டம் பிர்க்காவில் 170 குழாய்க் கிணறுகள் மின்சாரத்தினால் இயங்கிக்கொண்டிருக்க, 45 குழாய்க் கிணறுகள் மட்டுமே எண்ணெய்ப் பொறிகளின்மூலம் தற்போது இயங்கி வருகின்றன.

(இ) இந்த 45 குழாய்க் கிணறுகளில், 8 குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் பணி நடந்தேறி வருகிறது. எஞ்சிய 37 குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுக்காவில் திருமுட்டம் பிர்க்காவில் உள்ள குழாய்க் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்தால், அங்குள்ள புஞ்சை நிலங்களை, நஞ்சை நிலங்களாக மாற்றி விவசாயிகள் அதிக விளைச்சலைக் காண்பார்கள். ஆகவே அரசு திரும்பவும் பரிசீலித்து, எல்லா குழாய்க் கிணறுகளுக்கும் மின்சார இணைப்புக் கொடுக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, இப்பொழுது 8 குழாய்க் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கும் வேலை நடந்து வருகிறது. பாக்கி 37 குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் மின் இணைப்பு கொடுக்கவேண்டுமென்று புதிதாக 385 திட்டங்களுக்கு ஒரு தனித் திட்டம் வகுக்கப்பட்டு, வேலைத்திட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

Delay in disposal of files.

* 549 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to root out corruption and delays in disposing of files by the Government officials?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: லஞ்ச ஊழல் வழக்குகளை ஆய்வு செய்வதற்காக, கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக, அரசுத் துறையில் எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும், நாட்டத்திற்குக் கொண்டுவரப்படும் தனிப்பட்ட லஞ்ச ஊழல் வழக்குகள் குறித்து எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் கண்காணிப்பு ஆணைக்குழு அரசுக்கு ஆலோசனை